

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலமேடு பேரூர் பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் முத்தையன், தன்ராஜ், பரந்தாமன், அருண்குமார், பேரூர் செயலாளர்கள் மனோகரவேல் பாண்டியன், ரகுபதி, பேரூராட்சி தலைவர் சுமதி பாண்டியராஜன், பேரூர் இளைஞர் அணி பிரபு, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# திருப்பத்தூரில் நாளை ‘ஓரணியில் தமிழ்நாடு’ விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! இயக்குநர் கரு. பழனியப்பன் சிறப்புரை!

*சிவகங்கை, செப். 20 - நாளை (21,ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ஓரணியில் ஸதமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.*

*இது குறித்து சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.*

*கழக தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் ஓரணியில் தமிழ்நாடு விளக்கப் பொதுக்கூட்டங்கள் 20, 21 ஆகிய தேதிகளில் இரண்டு தினங்கள் மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்று வருகிறது.*

*அதன் அடிப்படையில் நாளை 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்பத்தூர் அண்ணா சிலை அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா திடலில் ஓரணியில் தமிழ்நாடு விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. மாவட்ட செயலாளராக அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் எனது தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.*

*இந்த பொதுக்கூட்டத்தில் தலைமை கழகத்தால் அறிவிக்கப் பட்ட தலைமைக் கழகப் பேச்சாளர் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.*

*திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ். சண்முகவடிவேல் வரவேற்று பேசுகிறார்.*

*பேரூர் கழக ஆர். கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.*

*இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் கள் ,சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,பொது மக்கள் திர ளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.*



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒருவரை தேர்வு செய்து சமூக வலைதள பயிற்சி முகாமை மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என். ரகு இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில் மாணவர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்புரையாற்றிய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், வலைதள பயிற்சியாளர்கள் இளமாறன், சூர்யா, கிருஷ்ணமூர்த்தி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தமிழ் சந்திரன், தினேஷ்குமார், சுந்தரேஸ்வரன், ராஜபாண்டி, ராம் பிரசாத் மற்றும் திரளான இளைஞர் அணியினர் இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கே.சுந்தரேஸ்வரபுரம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில் திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு வழங்கியுள்ள இடத்தில் ஊராட்சி பொது நிதியின் கீழ் ரூ.21.80 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி கட்டுவதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், கிளைச் செயலாளர் தங்கராஜ் பாண்டியன், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## மதுரை மாநகர்

# மாவட்டத்தில் சமூக வலைதளப் பயிற்சி!

மதுரை, செப். 20 – மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒருவரை தேர்வு செய்து சமூக வலைதள பயிற்சி முகாமை மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில் மாணவர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மூவேந்தரன் வலை தள பயிற்சியாளர்கள் இள மாறன் சூர்யா கிருஷ்ண மூர்த்தி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தமிழ் சந்திரன் தினேஷ்குமார் சுந்தரேஸ்வரன் ராஜபாண்டி, ராம் பிரசாத் மற்றும் திரளான இளைஞர் அணியினர் இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி கே.வி.கே. சாமி
### செப்டம்பர் 20 (1956)



தி.மு.க. செயற்குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் பணியாற்றியவர்.

1947ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தி.க. மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது பங்கேற்று சிறை சென்றவர்.

தூத்துக்குடி நகரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘ஓரணியில் தமிழ்நாடு’

**டாக்டர் வா.மைத்ரேயன்**
நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்



“நம்முடைய சுதந்திரப் போராட்டம் இன்னும் முற்றுப் பெற்று விடவில்லை. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதுடன், மொழி உரிமை பெற, சாதி பேதங்கள் நீங்க, ஏழைகள் நல்வாழ்வு பெற எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்தக் கருத்துக்கு வலு சேர்க்க வேண்டுமென்றால், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற தி.மு.க.வின் கொள்கைக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்தக் கொள்கையை நிலைநாட்டும் வகையில்தான் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கியுள்ளார்கள். மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரம், தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்பது, தமிழ் மொழியை உலகெங்கும் பரப்புவது, இந்தித் திணிப்பை தடுத்து நிறுத்துவது, தமிழ் மொழியை வழக்காடும் மொழியாக ஆக்குவது, தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அறிவிப்பது, தமிழகத்திற்கான பேரிடர் நிதி உதவிகளை உரிய தொகையை உரிய நேரத்தில் பெறுவது, தமிழ்நாட்டிற்கு உரிய நிதிப் பகிர்வைப் பெறுவது, தொகுதி வரையறையில் தமிழ்நாட்டிற்கு உரிய தொகுதிகளை பெறுவது, சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் என்ற பெயரில் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்படுவதை எதிர்ப்பது உள்ளிட்டவற்றை செயல்படுத்துவதுதான் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் அடிப்படைய நோக்கமாகும்.

தி.மு.க.வின் அடிப்படை நோக்கமே மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதுதான். பாதுகாப்பு, வெளியுறவுத் துறை, வர்த்தகம், ரயில்வே உள்ளிட்ட சில துறைகளைத் தவிர மற்றப் பொருட்களை மாநிலப் பட்டியலில் சேர்த்து அது குறித்த சட்டங்களை மாநில அரசே இயற்றி செயல்படுத்தும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தி.மு.க. நீண்ட காலமாக வலியுறுத்திக் கொண்டு வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கல்வி என்ற பொருள் பொதுப் பட்டியலில் உள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி பொதுப் பட்டியலில் உள்ள கல்வி குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது என்றாலும், அதே பொருள் குறித்து ஒன்றிய அரசு சட்டம் இயற்றினால் ஒன்றிய அரசின் சட்டமே செல்லும் என்பதுதான் சட்டம். இதன் காரணமாகத்தான் நீட் போன்ற போட்டித் தேர்வுகளை ரத்து செய்ய இயலாத நிலை மாநில அரசுக்கு ஏற்படுகிறது. அதனால்தான் கல்வி என்ற பொருளை மாநில அரசுப் பட்டியலில் சேர்க்க தி.மு.க. தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது. இது போன்ற மாநிலத்திற்கான கூடுதல் அதிகாரத்தைப் பெற வலுசேர்க்கும் வகையில்தான ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி உள்ளார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநிலப் பட்டியலில் உள்ள பொருட்கள் குறித்தும், பொதுப் பட்டியலில் உள்ள பொருட்கள் குறித்தும் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசிற்கு உண்டு. மக்களின் நலன் கருதி, மாநில அரசுகள் ஒப்புதலை இந்திய அரசமைப்புச் சட்டப்படி சட்டமுன்வடிவுகளை இயற்றும் போது அதற்கான அளிக்க வேண்டிய கடமை ஆளுநருக்கு உண்டு. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளை மத்திய அரசின் தூண்டுதலின் பேரில் ஆளுநர் அவர்கள் நிறுத்தி வைத்திருந்தார். ஆளுநரின் இந்தச் செயலை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு தொடுக்கப்பட்டு, வலுவான வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட உச்ச நீதிமன்றம், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நிலுவையில் இருந்த அனைத்து கோப்புகளுக்கும் அனுமதி வழங்கியது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் மூலம் மாநிலத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டது. மாநிலத்தின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான் ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கியுள்ளார்கள்.

காவேரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற அண்டைம நிலங்களுடனான நதிநீர்ப் பிரச்சனைகளின் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவது மாநில அரசின் தலையாய கடமை. காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் தமிழ்நாட்டிற்குரிய நீரைப் பெறும் வகையில் காவேரி நடுவர் நீதிமன்றத்தை அமைத்த பெருமை தி.மு.க.விற்கு உண்டு. இதன்மூலம், தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடகம் மாதாந்திர அடிப்படையில் திறந்துவிட வேண்டும் என்ற உரிமை நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.

1960களில் இந்தித் திணிப்பு போராட்டம் இந்தியா முழுவதும் நடைபெற்ற போது அதனை வீறுகொண்டு எதிர்த்த கட்சி தி.மு.க. தி.மு.க.வின் எதிர்ப்பு காரணமாக, அப்போதைய ஒன்றியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் உத்தரவாதத்திற்கிணங்க இந்தித் திணிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. அப்போது தொடங்கி இப்போது வரை தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில், புதிய கல்விக் கொள்கையை வெளியிட்ட ஒன்றிய அரசு, அதன்மூலம் மும்மொழிக் கொள்கையை திணிக்க முயற்சி செய்தது. இதனைக் காரணம் காட்டி தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை நிறுத்தி வைத்தது. இதன் காரணமாக கட்டாயக் கல்விச் சட்டத்தின்கீழ் 25 விழுக்காடு ஏழையெளிய மாணவர்களை தனியார் பள்ளிகளில் சேர்க்க முடியாத நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற அவல நிலையை தடுத்து நிறுத்தவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தை துவக்கியுள்ளார்கள்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த மொழி தமிழ் மொழி. இப்படிப்ப.ட தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்காடும் மொழியாக அறிவிக்க வேண்டும், நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழ் மொழியில் வெளியிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தி.மு.க. நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. இந்தக் கோரிக்கையை வென்றெடுக்க நாம் ஓரணியில் திரள வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் பெருவெள்ளம் ஏற்படுவதும், அதன் காரணமாக விவசாயம், குடிசைகள், கட்டமைப்புகள், மனித உயிரினங்கள், கால்நடைகள் பாதிக்கப்படுவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்பினை சமாளிக்க ஒன்றிய அரசிடம் நிதி கோரும்போது, அதனை மறுப்பதையும் அல்லது குறைவான அளவில் நிதி ஒதுக்கீடு செய்வதையும் ஒன்றிய அரசு வாடிக்கையாகக் கொண்டுள்ளது. ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை காரணமாக வளர்ச்சித் திட்டங்கள் தடைபடுகின்றன. ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசிற்கு வருவாயை ஈட்டித் தருவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது. அதே சமயத்தில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் வருவாய் என்பது யானைப் பசிக்கு சோளப்பொறி என்ற பழமொழிக்கேற்ப அமைந்துள்ளது. தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வு மிகக் குறைவாக கிடைப்பதற்கான காரணம், நிதிக் குழுவின் காரணிகள் பெரும்பாலும் வளர்ச்சி அடையாத மாநிலங்களுக்கு சாதகமாக உள்ளதுதான். வளர்ச்சி அடையாத மாநிலங்களுக்கு கூடுதல் நிதிப் பகிர்வு அளிப்பது ஆரோக்கியமானதுதான் என்றாலும், தமிழ்நாடு உள்பட வளர்ச்சி அடைந்த மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை வெகுவாக குறைப்பது ஏற்புடையதல்ல. மாநில அரசுகளின் வளர்ச்சி, கூடுதல் வருவாய் ஈட்டுதல், கல்வி மற்றும் சுகாதாரக் குறியீடுகளின் முன்னணி ஆகியவற்றிற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தி.மு.க.

தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தக் கோரிக்கையை வென்றெடுக்கவே ஓரணியில் தமிழ்நாடு முழக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில், சிறப்புத் தீவிர வாக்களர் திருத்தம் என்ற பெயரில் பீகார் மாநிலத்தில் 65 இலட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். உண்மையான வாக்காளர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவது ஒரு ஜனநாயகப் படுகொலை. இதனை எதிர்த்து அறப் போராட்டங்கள், சட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஆதார் அடையாள அட்டை வைத்திருந்தால் அவர்களை வாக்காளர் பட்டியில் சேர்க்க வேண்டுமென்ற உத்தரவை பிறப்பித்து இருக்கிறது. இதன்மூலம் நீக்கப்பட்ட பெரும்பாலான வாக்காளர்கள் மீண்டும் சேர்க்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இதேபோன்றதொரு நிலைமை தமிழ்நாட்டில் ஏற்படாமல் இருக்க ஓரணியில் தமிழ்நாடு முழக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகள் 1971 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின்படி நிர்ணயிக்கப்பட்டவை. இந்திய அரசமைப்புச் சட்டப்படி ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி முடிந்த பின், மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். ஆனால், 1976 ஆம் ஆண்டு குடும்ப கட்டுப்பாட்டு முறையை ஊக்குவிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் காரணமாக, தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளத் தேவையில்லை என இரண்டு முறை சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன்படி, 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு மேற்கொள்ளப்படும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகுதான் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ள முடியும். இந்த நிலையில், 01-03-2027 தேதியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை குறித்த தென் மாநிலங்களின் கவலை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், உரிய நேரத்தில் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் விவாதிக்கப்படும் என்றும் மத்திய உள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்ற பார்வையே தமிழ்நாட்டை வெகுவாகப் பாதிக்கும். ஏனென்றால், மத்திய அரசின்குடும்ப கட்டுப்பாட்டை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாநிலங்களில் தமிழ்நாடு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு உள்பட சில மாநிலங்களின் சிறப்பான செயல்பாடு காரணமாகத்தான் இந்தியாவின் மக்கள் தொகை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்பது மத்திய அரசின் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதற்கு கொடுக்கப்பட்ட தண்டனை போல் ஆகிவிடும்.

உதாரணமாக, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4.11 கோடி. பீகார் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 4.21 கோடி. தமிழ்நாட்டிற்கும், பீகாருக்கும் உள்ள மக்கள் தொகை வித்தியாசம் என்பது வெறும் 10 இலட்சம். 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி பார்த்தால், தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21கோடி. பீகார் மாநிலத்தின் மக்கள்தொகை 10.40 கோடி. தமிழ்நாட்டிற்கும், பீகாருக்கும் உள்ள மக்கள் தொகை வித்தியாசம் என்பது 3.19 கோடி. 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறும் போது, தமிழ்நாட்டிற்கும், பீகாருக்கும் இடையேயான மக்கள் தொகை வித்தியாசம் என்பது 6 கோடிக்கு மேல் இருக்கும்.

இந்தச் சூழ்நிலையில், மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டால், தமிழ்நாட்டிற்கான மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. தற்போதுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை நீட்டிக்கப்பட வேண்டும். ஒருவேளை மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை, உதாரணத்திற்கு 50 விழுக்காடு அதிகரிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசு நினைத்தால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போதுள்ள மக்களவைத் தொகுதி எண்ணிக்கையின் அடிப்படையில் 50 விழுக்காடு உயர்த்த வேண்டும். இதுதான் அனைத்து மாநிலங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். வலியுறுத்தத்தான் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டம் துவங்கப்பட்டு இருக்கிறது. இதனை

மொத்தத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்கிற திட்டம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கான திட்டம். தமிழ்நாட்டு நலன்கள் சார்ந்த திட்டம். தமிழ்நாட்டு நலன்கள் காக்கப்பட வேண்டுமென்றால், தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமென்றால் அனைவரும் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் பங்கேற்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கக் கூடிய சக்தி தி.மு.க.விடம் மட்டுமே உள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சி என்பது தமிழ்நாட்டு மக்களின் எதிர்க்கட்சியாக மாறி, ஒன்றிய பாரதிய ஜனதா கட்சியின் அடிமையாக மாறியுள்ளது. இந்தக் கட்சியால் அந்தக் கட்சியையே காப்பாற்றிக் கொள்ள இயலாத நிலையில், அவர்கள் தமிழ்நாட்டைக் காப்பாற்றுவார்கள் என்பது எண்ணிப் பார்க்க முடியாத ஒன்று.

கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானாம் என்ற பழமொழிக்கேற்ப எதிர்க் கட்சியின் செயல்பாடு அமைந்துள்ளது.

“இலட்சியத்தை அடைய கஷ்ட நஷ்டம் அடைதல் எனும் விலை கொடுத்தாக வேண்டும்” என்று கூறினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, தமிழக மக்களை காக்க இலட்சியப் பபணத்தை தி.மு.க. மேற்கொண்டு இருக்கிறது. இந்தப் பயணத்தில் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஓரணியில் நிச்சயம் வருவார்கள். தமிழ்நாட்டு மக்களின் வருகையை 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிவு வெளிப்படுத்தும். அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று மீண்டும் தி.மு.க. ஆட்சி அமையும் நாள் வெகு தூரத்தில் இல்லை.